IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II SRIVILLIPUTTUR
CC. No.677/2019

**PW - 2 Cross**

Name: **திரு.சண்முகராஜ்**

S/o : வீரராவு

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of July 2026.

14.07.2026

**எதிரிகள் ஆஜர்.**

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

இவ்வழக்கின் ஸ்தல மகஜரை யார் தயார் செய்தார்கள் என்றால் செந்தில்முருகன் என்பவர் தயார் செய்தார். அதனை அவர் 12.00 மணியளவில் தயார் செய்தார். அதில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி எனக்கு தெரியும். ஸ்தல மகஜரில் 2ம் எதிரி கோவிந்தராஜ் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மணலை காப்பு காட்டில் அள்ளப்பட்டதை நான் பார்த்தேனா என்றால் இல்லை, மணல் அள்ளி எடுத்துக்கொண்டு வரும்போது நான் பார்த்தேன். மேற்படி இடத்தில் மணல் அள்ளப்பட்டதற்கான தடயங்கள் இருந்ததா என்றாலும் அதனை நாங்கள் புகைப்படம் எடுத்தோமா என்றாலும் ஜிபிஎஸ் மூலம் புகைப்படம் எடுத்தோம். ஸ்தல மகஜரில் எத்தனை யூனிட் மணல் என்று குறிப்பிட்டுள்ளோமா என்றால் அரை யூனிட் என்று குறிப்பிட்டுள்ளோம். அதன் மதிப்பு ஸ்தல மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஸ்தல மகஜரில் ஸ்தலத்தில் மண்வெட்டி மற்றும் மண் அள்ள பயன்படுத்தும் உபகரணங்கள் இருந்ததா என்றால் இல்லை. மேற்படி சம்பவயிடத்தை எங்கள் துறையில் வழங்கப்பட்ட செல்போனில் புகைப்படம் எடுத்தோம். ஸ்தல மகஜரில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் புல எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி சராகத்தின் பரப்பளவு குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் மேற்படி புகைப்படத்தை 12.05 மணிக்கு எடுத்தோம். 5 நிமிடங்களில் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று மேற்படி புகைப்படத்தை எடுத்துவிட்டோம். மேற்படி பேயன் ஊரணி ஓடையானது அரசுக்கு பாத்தியப்பட்டதாகும். ஸ்தல மகஜர் மற்றும் ஒப்புதல்

வாக்குமூலத்தில் எதை வைத்து மணல் அள்ளினார்கள் என்பது பற்றி குறிப்பிடப்பட்டுளளதா என்றால் இல்லை. எதிரிக்கு எழுத படிக்க தெரியும் என்றாலும அதனால் அவரே ஒப்புதல் வாக்குமூலத்தை அவரே எழுதியிருககலாம் என்றாலும் நாங்கள் எழுதியிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்தவித வற்புறுத்தலுமின்றி தானாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் வாங்கவில்லை அதனால் அதுபற்றி எனக்கு தெரியாது. H நமுனாவில் மணலை கைப்பற்றியது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் பார்த்தபோது வாகனத்தில் 2 தட்டு, 4 மண்வெட்டி இருந்தது.மேற்படி 12.05 மணிக்கு எடுத்த போட்டோவானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. குடத்தை இவ்வழக்கில் கைப்பற்றியுள்ளோமா என்றால் இல்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள் புகைப்படங்களில் செந்தில்முருகன் என்பவர் இருந்ததாக அவரது புகைப்படம் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மீதமுள்ள மண்வெட்டி மற்றும் தட்டுகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லைஎன்றால் சரியல்ல. மேற்படி நாங்கள் எடுத்த புகைப்படத்தில் 7 மண்வெட்டி மற்றும் 6 இரும்பு தட்டுகள் உள்ளது என்றாலும் ஆனால் இந்நீதிமன்றத்தில் 4 மண்வெட்டிகளும் 2 தட்டுகளும் தான் தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரிதான். மேற்படி மணலை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல அந்த மணல் பற்றி எனது வாக்குமூலத்திலும், பிடிபொருட்கள் மற்றும் H நமுனாவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மற்ற சாட்சிகளின் வாக்குமூலங்களில் அதுபற்றி குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி நான் கூறியவாறு 12.00 மணிக்கு மேற்படி புகைப்படங்களை எடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பின்னிட்டு 02.45 மணிக்கு மேற்படி புகைப்படங்களை எடுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் 1ம் எதிரியிடமிருந்து பிடிபொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. வன அதிகாரி கேட்டுக்கொண்டதால் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.